**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**04.08.2026**

OS. No.25/2008

பக்கம் – 2

DW2 – ரத்தினவேல் (D9)

**வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி எதற்காக இந்த தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தரியும் பாகப்பிரிவினை கோரியும் மற்றும் 6 முதல் 9 பிரதிவாதிகள் கிரயம் வாங்கியது செல்லாது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் 9ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் படிக்க தெரியும். நான் அரசியல் கட்சி சார்ந்து இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். சொத்துக்கள் என் பெயரில் கிரயம் வாங்கப்படவில்லை என்றால் சரிதான். 6ம் மற்றும் 7 பிரதிவாதிகள் என் மகன்கள்.என் மகன் 6ம் பிரதிவாதி மணிவாசகன் பெயரில் சர்வே எண்கள் 77/1, 77/2, 77/4, 2 ஏக்கர் 18 செண்ட் கிரயம் பெற்றேன். 7ம் பிரதிவாதி தென்னரசு பெயரில் சர்வே எண் 77/3, 34/2, 77/4, 2 ஏக்கர் 17 செண்ட் கிரயம் பெற்றேன். இரண்டு கிரயம் பெறுவதற்கு முன்பு நான் என்னென்ன ஆவணங்களை பரிசீலித்தேன் என்றால் பாகப்பிரிவினை ஆவணத்தை பார்த்தேன். தாவா சொத்து குறித்து வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் கிரயம் பெறுவதற்கு முன்பு பெற்ற 2005 ஆண்டிற்கான வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பி. வரிசை ஆவணங்களில் 2005 ஆண்டிற்கான வில்லங்க சான்றோ அல்லது வேறு எந்த வில்லங்க சான்றோ இல்லை என்றால் சரிதான். கிரயம் பெறுவதற்கு முன்பு அசல் ஆவணங்களை எனக்கு கிரயம் செய்து கொடுத்தவரிடமிருந்து வாங்கி பார்த்தது குறித்தும் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து கிரயம் பெறுவதற்கு முன்பு இந்து வாரிசுரிமை சட்டம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும் . அதன் அடிப்படையில் தான் நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1983 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் யார் யாருக்கிடையே ஏற்பட்டது என்றால் ராமசாமி பிள்ளை சந்ததிகளுக்கிடையே ஏற்பட்டது. ராமசாமி பிள்ளைக்கு 3 ஆண், 6 பெண் பிள்ளைகள் உள்ளனர். ராமசாமி பிள்ளையின் 3 ஆண்பிள்ளைகள் யார் யார் என்றால் எனக்கு சரிவர தெரியவில்லை. ராமசாமியின் பெண் பிள்ளைகள் யார் யார் என்றால் எனக்கு தெரியாது. ராமசாமி பிள்ளையின்

முதல் மகன் பெயர் வெங்கடேச முதலியார் என்றால் சரிதான். வெங்கடேச முதலியார் 1978 ல் காலமானார். ராமசாமி முதலியார் எப்போது காலமானர் என்று எனக்கு தெரியாது. 1976 ல் ராமசாமி முதலியார் காலமானதாக 1ம் பிரதிவாதி அவரது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் வெங்கடேச முதலியாரின் மூதாதையார் சொத்துக்கள் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வெங்கடேச முதலியாரின் மூதாதையார் சொத்து எ்ன்பதற்கு எநத் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை ஆவணம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் பாக்ப்பிரிவினை பிரிக்கப்பட்ட சொத்துக்கள் எந்ததெந்த ஆவணத்தின் வாயிலாக கிடைக்கப்பெற்றது என்று குறிப்பாக இல்லை என்றால் எனக்கு பாகப்பிவிரினையால் கிடைத்தது என்ற விவரம் மட்டும் தான் தெரியும். நான் சொல்வது போல் வெங்கடேச முதலியாரின் பூர்விக சொத்து என்பது முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 22.08.1962 கிரய பத்திரம் முன்னிலைக்கு நான் கிரயம் செய்ததாக சொல்லப்படும் சர்வே எண் 77/4, 2 ஏக்கர் 8 செண்ட் நிலமானது வெங்கடேச முதலியார் பெயரில் கிரயம் பெற்றப்பட்டுள்ளது என்றால் தவறு. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் வா.சா.ஆ–11 பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ–11 ஆவணம் இருந்தும் அதை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டிருந்தும், அதை தற்போது என்னிடம் காட்டப்பட்டும் நான் அதை மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.தாவா சொத்துக்கள் வெங்கடேச முதலியார் மற்றும் ராமசாமி முதலியார் பெயரில் கிரயம் பெற்றுள்ளதற்கு வா.சா.ஆ–11 முதல் வா.சா.ஆ–19 நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் நான் இது குறித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–11 முதல் வா.சா.ஆ–19 வெங்கடேச முதலியார் மற்றும் ராமசாமி முதலியார் பெயரில் கிரயம் பத்திரங்கள் செய்யப்பட்டுள்ளதால் நான் சொல்வது போல் தாவா சொத்து பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–11 முதல் வா.சா.ஆ–19 குறித்து மறுப்பு தெரிவித் து எனது பிரமாண பத்திரத்திலோ, கூடுதல் பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. பெண்களுக்கு அந்த காலகட்டத்தில் 1983 ல் சொத்தில் உரிமை இல்லை என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. 1956 ல் கணவர் இறந்துவிட்டால் அவரது வாரிசுதாரர்களான மனைவி, ஆண் / பெண் குழந்தைகளுக்கு சரிசமமான பங்கு உள்ளது என்றால் தவறு. ராமசாமியின் பெண் வாரிசுகளான அம்சா பாய், ஆண்டாள்,

ஜெயலட்சுமி, ராம்பாய், தனலட்சுமி ஆகியோரும் நான் குறிப்பிட்டுள்ள 1983 பாகப்பிரிவினையில் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். அம்சா பாய், ஆண்டாள், ஜெயலட்சுமி, ராம்பாய், தனலட்சுமி ஆகியோருக்கு 1950 ஆண்டுகளுக்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். இவர்களும் ஒரு தரப்பினராக இருக்கும் போது வெங்கடேச முதலியாரின் பெண் பிள்ளைகளுக்கு மட்டும் சொத்தில் பாகம் இல்லை என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. சத்தியமூர்த்தி யார் என்றால் வெங்கடேச மூர்த்தியின் மகன் ஆவார். 1ம் பிரதிவாதி சாந்தி மற்றும் வாதிகளின் தாயார் விஜயகுமாரி வெங்கடேச முதலியாரின் பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதி சத்திய மூரத்தியிடம் உங்களுடைய அத்தைகளெல்லாம் பாகப்ப்ரிவிரினினை பத்திரத்தில் கையொழுத்து போட்டிருக்கிறார்கள் ஏன் உன் சகோதரிகிள் பாகப்பிரிவினை பத்திரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்று கேட்டேன். அதற்கு சத்திய மூர்த்தி என்னிடம் பாகப்பிரிவினை மூலமாக எனக்கு கிரயம் கொடுக்கும் சொத்து அவருக்கு தனிப்பட்ட முறையில் சுவாதனீத்திற்கு வந்து விட்டது என்றும் சொன்னார். பெண்களுக்கும், சொத்தில் பங்கு உண்டு என்றும் உங்கள் சகோதிரியிடம் பாகப்பிரிவினை பத்திரத்தில் கையொப்பம் வாங்கிக் கொடுங்கள் என்று நான் கேட்டானா என்றால் நான் கேட்டேன் அதற்கு அவர் மறுத்துவிட்டார். நானாவது 1ம் பிரதிவாதி சாந்தியிடமோ, அல்லது 2, 3 வாதிகளிடமோ நான் இது சம்மந்தமாக உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணை உள்ளதா என்ற கேட்டேனா என்றால் அவர்கள் யார் என்று அப்போது எனக்கு தெரியாது. ராமசாமியின் வாரிசுகளுக்கிடையே 1983 ல் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 1978 ல் வெங்கடேச முதலியார் இறந்ததால் தான் அவரது சார்பாக சத்திய மூர்த்தி பாகப்பிரிவினையில் ஒரு தரப்பினராக சேர்க்கப்ப்டடுள்ளால் என்றால் சரிதான். ராமசாமி முதலியாரரின் மற்ற மகன்கள் கோபால் , துரை ஆகியோர்களின் வாரிசுகள் யாரும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க்ப்படவில்லை என்றால் சரிதான். 1978 ல் வெங்கடேச முதலியார் இறந்துவிட்டதால் அவருடைய நேரிடை வாரிசுகளான சாந்தி, வாதிகளின் தாயார் ஆகியோர் மற்றும் 2ம் பிரதிவாதி சத்தியமூர்த்தி ஆகியோர் கூட்டாக வெங்கடேச முதலியாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை முதல் நிலை வாரிசுகள் என்ற அடிப்படையில் உரிமையுள்ளவர்கள் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. 1978 ல் வெங்கடேச முதலியார் இறந்துவிட்டதால் அவருடைய சொத்துக்களுக்கு அவருடைய நேரிடை வாரிசுகள் சரிபாக உரிமை உள்ளவர்கள் என்றும் அவர்கள் பாகப்ப்பிரிவினை பத்திரத்தில் தரப்பினராக சேர்க்கப்படாததால் 1983 ம் வருடத்திய பாக்ப்பிரிவினை பத்திர்ம் வாதிகளை

எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் அது தவறு. நான் வாங்கிய கிரய் பத்திரத்தில் வாதியோ, 1ம் பரிதிவாதியோ எந்தவித சாட்சியும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை 2ம் பரிததிவாதியிடமிருந்து வாதிகளுக்கு தெரியாமல் 6 ,8 பிரதிவாதிகள் கிரயம் பெற்றதால் 6, 8 பிரதிவாதிகளுக்கு எதிராக வாலாஜாபாத் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் அது பொய்யான புகார் ஆகும். வாதியன் சுவாதீனத்தை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்தில் நான் இடையுறு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு தான் மேற்கண்ட புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பொய் புகார். வாதிகளுக்கு பி.சா.ஆ15, 16, 17 முன்னிலைக்கு தாவா சொத்தில் அவர்களு்கு உண்டான பங்கு குறித்து செட்டில்மெண்ட் எழுதி வைக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்., ஆனால் அந்த ஆவணம் தவறான ஆவணம் ஆகும். பி.சா.ஆ15, 16, 17 குறித்து எனக்கு எ்போது தெரிய வந்தது என்றால் 2014 ல் தெரிய வந்தது. அது போல் செட்டில்மெண்ட் எழுதியது செல்லாது என்று விளம்பு பரிகாரம் கேட்டு இந்த நீதிமன்றத்தில் 2014 முதல் இன்றைய தேதி வரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு உரிமை இருந்த காரணத்தினால் தான் நான் எந்த வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் பதிலுரை தாக்கல் செய்தபோது அதனுடன் ஆவணங்கள் இ ணைத்து தாக்கல் செய்யவில்லை என்றும் தற்போது இந்த வழக்கிற்காக ஆவணங்கள் தயார் செய்து கால தாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்த 2ம் பிரதிவாதி சத்தியமூரத்தி வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்று அவர் மறுத்திருக்கிறார் என்றால் தவறு. கூட்டு பங்குதாரரரே தாவா சொத்தில் வாதிக்கு உரிமை உண்டு என்று சொல்லும் நிலையில் தாவா சொத்தை கிரயம் பெற்றநபர் வாதியின் உரிமையை மறுக்க எனக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. முறையான ஆவணங்களை பரிசீலிலிக்காமல் உரிமையாளர் யார் என்று தெரியாமல் தாவா சொத்தை கிரய்ம் பெற்றுள்ளதால் எனக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றும் நான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வெங்கடேச முதலியாருக்கு வாரிசு உள்ளார்கள் என்று தெரிந்தும் அவர்களிடம் கையொப்பம் வாங்காமல் நான் கிரயம் பெற்றுள்ளால் அந்த கிரயம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்து சத்த்யமூர்த்தி நேரிடைய கிரயம் பெற்ற சொத்து அது வெங்கடேச முதலியாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்துக்களில் சில

சொத்துக்கள் வெங்கடேச முதலியார் பெயரிலோ நேரிடையாக கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.